தினமலர்
நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

சனி, அக்டோபர் 12, 2013

# மருத்துவம் சார்ந்த சட்ட விதிகள் குறித்து புரிதல் அவசியம் :கருத்தரங்கில் சட்ட ஆலோசகர் வலியுறுத்தல்

சென்னை :"மருத்துவ சேவை நிறுவனங்களுக்கு சுகாதாரம், மருத்துவ பணியாளர் பாதுகாப்பு சட்ட விதிகள் குறித்த தெளிவான புரிதல் அவசியம்," என, மருத்துவ சட்ட ஆலோசகர் சாமுவேல் ஆபிரகாம் வலியுறுத்தினார்

சென்னை சங்கர நேத்ராலயா அகடமி சார்பில், 'மருத்துவ சேவையில் சட்டமும் அதன் பாதிப்பும்' என்ற தலைப்பில், இரண்டு நாள் கருத்தரங்கம், நேற்று தொடங்கியது.

கருத்தரங்கை, பொது மேலாளர் அகிலா கணேசன் துவக்கி வைத்து பேசுகையில், "சுகாதார துறைகள் சந்திக்கும் சவால்கள், அதற்கான சட்ட விதிகள், அது தொடர்பான புரிதலுக்கு, கருத்தரங்கம் பயனாக அமையும்," என்றார்

வேலூர் கிறிஸ்துவ மருத்துவ கல்லூரி மூத்த சட்ட ஆலோசகர் சாமுவேல் ஆபிரகாம் பேசியதாவது:

மருத்துவமனைகள் மீது, தாக்குதல் நடத்தும் நிகழ்வுகள் நடக்கின்றன. பேஷன்ட்கள் மருத்துவ சட்ட விதிகளை பின்பற்றாமல், சாதாரண வழக்கு பதிகின்றனர்

சிறை தண்டனை :பேஷன்ட்களுக்கும், மருத்துவமனை நிர்வாகத்திற்கும் இது பற்றி தெளிவு இல்லாததே காரணம். சட்டத்தை முறையாக பின்பற்றினால், மூன்று ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை கிடைக்கும்.

எனவே, மருத்துவம் சார்ந்த சட்ட விதிகளை, மருத்துவ சேவை நிறுவனங்கள் தெளிவுடன் இருப்பது நல்லது.பொத்தாம் பொதுவாக, டாக்டர்கள் சிகிச்சை அளிக்கக்கூடாது. நோயாளிகளின் உடல்நிலையை நன்கு அறிந்து சிகிச்சை அளிப்பதும் முக்கியம்.
இவ்வாறு அவர் பேசினார் மருத்துவமனை உதவி பதிவாளர் மகாலிங்கம் மற்றும் சென்னையில் பல்வேறு மருத்துவமனைகளின் நிர்வாக அதிகாரிகள், மேலாளர்கள் இதில் பங்கேற்றனர்

URL : http://www.dinamalar.com/district_detail.asp?id=825003